[பேரவைத் தலைவர்]

ஒரு பத்திரிகை ஆசிரியர் ஓர் அரசியல் தலைவர் ஏதோ ஒன்றைச் சொல்லும்போது அதை ஆராய்ந்து பிறகு வெளியிடுவது எங்களுக்கு சாத்தியமில்லை என்று கூறுவது ஏற்கத் தக்கதாக இல்லை.

ஒரு அரசியல் தலைவர் சட்டமன்றப் பேரவை நடவடிக்கை குறித்து ஓர் அறிக்கையை வெளியிடுகின்றபோது அது உண்மைதானா என்று ஆராய்ந்து பின் பத்திரிகையில் வெளியிட வேண்டும். இல்லையென்றால் அது பேரவையின் நடவடிக்கைகளை திரித்துக் கூறுவதற்கு ஒப்பாகும்.

''To print and publish any libel reflecting on the proceedings of the House has been held to be a high violation of the rights and privileges of the House''.
(May's Parliamentary Practice.)

கண்டன வெளிநடப்புக் காரணமாக வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்று திரு. கோவிந்தராஜன் கூறும் காரணத்தைக் கவனிக்க வேண்டியது தோழர் திரு. சி. ராஜேஸ்வரராவ் அவர்களே தவிர மக்கள் குரல் அல்ல என்று ஆசிரியர் எழுதி இருப்பது ஒரு தரமான பத்திரிகையின் பொறுப்புள்ள வாதமாக இல்லை. இது கண்டனத்திற்கு உரியது,

அவை நடவடிக்கைகள் குறித்த செய்திகளை வெளியிடும் போது பத்திரிகைகளுக்கும் மிகுந்த பொறுப்புள்ளது. உண்மையான நடவடிக்கைகளைத் தான் அவைகள் வெளியிட வேண்டும். உண்மைக்கு மாறான செய்திகளை, நடவடிக்கைகளை வெளியிட்டு விட்டு, 'அது பிறர் ஒருவர் கூற்று' என்று பிறரைப் பொறுப்பாக்குவது உகந்தது அல்ல. இந்தக் கடமை உணர்ச்சியைப் பத்திரிக்கைகள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்துடன் இப்பிரச்சினையில் மேல் நடவடிக்கை தேவையில்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

9. அறிவிப்பு.

பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இவ்வாண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின் பேரவையின் முதல் கூட்டத் தொடர் 6—2—1989ஆம் நாளன்று தொடங்கி 21—2—1989 வரையிலும், மீண்டும் 25—3—1989 அன்று தொடங்கி இன்று (12—5—1989) வரையிலும் நடைபெற்றுள்ளது.

பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்கள் 6—2—1989ஆம் நாளன்று, தற்காலிகத் தலைவராக இருந்த மதிப்புமிகு உறுப்பினர் திரு. கே. ரமணி அவர்கள் முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

8—2—1989ஆம் நாளன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் பேரவையால் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, அவர்களுக்குப் பாராட்டுரைகளும் வாழ்த்துரைகளும் வழங்கப்பெற்றன.

மேதகு ஆளுநர் அவர்கள் 11—2—1989ஆம் நாளன்று பேரவை உறுப்பினர்களிடையே உரையாற்றினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25—3—1989 ஆம் நாளன்று பேரவையில் 1989—90ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையைப் படைத்தார்கள்.

5—5—1989 ஆம் நாள் அன்று சட்டமன்றப் பொன் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அந்த விழா ஏற்பாட்டில் அனைவரும் ஆர்வத்துடன் ஒத்துழைத்தனர். ஆனாலும் விழா நடைபெற்ற அன்று ஏற்போர் பலராயினர், மறுப்போரும் உளராயினர் என்பதுதான் வருந்தத்தக்கது.

பேரவை கூடிய மொத்த நாட்கள் ..	44
மாலையிலும் பேரவை கூடியுள்ள நாட்கள் ..	5
அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம். ..	213 மணி 36 மணித்துளிகள்
ஆளுநர் உரைமீது விவாதம் நடைபெற்ற நாட்கள். ..	5
பங்கு கொண்ட உறுப்பினர்கள் ..	45

நிதி அலுவல்கள் :

வரவு—செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள். ..	7
பங்கு கொண்ட உறுப்பினர்கள் ..	60
மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள். ..	21
உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள் ..	293
கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள். ..	1,708

அவைமுன் வைக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள். ..	1,571
விவாதித்து நிறைவேற்றப் பெற்ற மானியக் கோரிக்கைகள். ..	59
வினாக்கள்—விடைகள் :	
குறுகிய கால வினாக்கள் ..	2
உடுக்குறியிட்ட வினாக்கள் ..	235
உடுக்குறியிடாத வினாக்கள் ..	75
துணை வினாக்கள் ..	1,255
கவன ஈர்ப்புகள் :	
அனுமதிக்கப் பெற்றவை ..	140 அறிவிப்புகள் (120 பொருள் குறித்து)
அவையில் எடுத்துக்கொள்ளப் பெற்றவை ..	61 (49 பொருள் குறித்து).
ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.:	
அவையில் எடுத்துக்கொண்டு அனுமதி மறுக்கப்பெற்றவை ..	14
உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்:	
அறிவிப்பு வரப்பெற்றவை ..	42
இசைவு மறுக்கப்பெற்றவை ..	36
உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றவை ..	2
அரசினர் சட்ட முன்வடிவுகள்:	
ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பெற்றவை. ..	32
நிறைவேற்றப் பெற்றவை ..	32
அரசினர் தனித் தீர்மானங்கள்:	
வரப் பெற்றவை ..	4
நிறைவேற்றப் பெற்றவை ..	4

பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்:

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.	..	173
(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.	..	81

பார்வையாளர்கள்:

மாடத்தில் அனுமதிக்கப் பெற்ற—		
ஆண்கள்	..	13,124
பெண்கள்	..	1,120
தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள்.	..	13,127
பேரவை நிகழ்ச்சிகளைக் காண வருகை தந்தோர் மொத்த எண்ணிக்கை.		27,371

நூலகம்:

சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்.	..	891
வழங்கப் பெற்ற நூல்கள்	..	753

நடவடிக்கைக் குறிப்புகள்:

தட்டச்சு செய்யப்பெற்ற மொத்த பக்கங்கள்.	..	9,525

பேரவையின் நிகழ்ச்சிகளைச் சீரிய முறையில் நடத்திச் செல்ல ஒத்துழைப்புத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றைய அமைச்சர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலையில் தொடங்கி அவை முடியும் வரை இருந்து அவையின் அனைத்து நடவடிக்கைகளிலும் முழு ஈடுபாடு காட்டிவரும் முதல்வர் அவர்களையும், பிற அமைச்சர்களையும் பாராட்டுகிறேன்.

அதுபோல் நாள்தோறும் தவறாமல் கூட்டத் தொடர் முழுவதும் வருகை தந்து சட்டமன்றக் கடமையாற்றிய பல்வேறு உறுப்பினர்களையும் நெஞ்சாரப் பாராட்டுகிறேன். அதிலும் பி. எச். பாண்டியன் அவர்களைக் குறிப்பாக பாராட்ட வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 மே 12] [பேரவைத் தலைவர்]

பேரவையைச் சிறப்பாக நடத்திச் செல்வதில் உதவியாக இருந்த பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. பெ. துரைசாமி அவர்களுக்கும், மாற்றுத் தலைவர்களான திருவாளர்கள் மு. இராமநாதன், என். கணபதி, பெ. சீனிவாசன், கே. ஏ. செங்கோட்டையன், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. சி. கோவிந்தராஜன் ஆகியோருக்கும் என் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல முறையில் பேரவையின் நிகழ்ச்சிகள் நடைபெற்றிட உதவிய அவையிலுள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும், துணைத் தலைவர்களுக்கும், கட்சிகளின் கொறடாக்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

காலத்தைக் கண்ணேபோல் போற்றி கருத்துச் செறிவுடைய உரைகளைச் சுருக்கமாகவும், சுவைபடவும் வழங்கிய உறுப்பினர் பெருமக்கள் அனைவருக்கும் என் நெஞ்சம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுத் துறைகள் மற்றும் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் செய்தியாளர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவை அலுவல்கள் நன்முறையில் நடைபெற்றிட எனக்குத் துணை நின்ற சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்களுக்கும் பேரவையின் ஏனைய அலுவலர்களுக்கும் பாதுகாப்பு அலுவலர்களுக்கும் நம் பேரவை வாயிலாகப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தமிழர் தேர்ந்தெடுத்த ஆட்சி
எதிர்க்கட்சி உறுப்பினரும் சேர்ந்து
தந்து வைத்த மாண்புமிகு பதவி
சரியாகச் செயற்படுத்த உதவி
முந்தி வந்து ஒத்துழைத்தீர் யாண்டும்
முறையாக உரையாற்றி ஆக்கம்
தந்தோர்க்கு நன்றி சொல்ல வேண்டும்
வரும் நாளில் சந்திப்போம் மீண்டும்.

(பிற்பகல் 3-00)

இந்த அவையினுடைய எல்லா அலுவல்களையும் முன் நின்று சிறப்பாக நடத்திய அவை முன்னவர் அவர்களுக்கு தனியாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS